1225

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்

1225
1-55

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. தை, உக 11—2—55 தளிர்–19

OFFICE OF ... 4 MAR 1955 MADRAS

## வாழ்த்து

"நலங்கிள்ளி"

செங்கதிர் போற்றுதும்! தீம்புனல் போற்றுதும்!
அங்கண் அகன்ஞாலத் தருளோ டமுதூட்டி
எங்கெவர்க்குந் தாய்போற லான்.

நன்னிலம் போற்றுதும்! நானிலம் போற்றுதும்
செந்நெல் கரும்பேனல் செல்வங் கொழித்தெவர்க்கும்
நன்மை நனிசெய்த லான்.

ஏர்வலோன் போற்றுதும்! இன்றமிழ்ப் பாக்களால்
வேர்வைநீர் பாய்ச்சி விளைத்துல கங்காக்கும்
தீரனச் செம்மலே யால்.

நற்றமிழ் போற்றுதும்! நாத்தழும் பேறிட
விற்பனர் சான்றவர் வீரர்கள் ஈன்றநல்
அற்புதத் தாயாத லான்.

முத்தமிழ் போற்றுதும்! முப்பானூல் போற்றுதும்!
எத்தலத் தியாரும் இணையில தென்றிடு
புத்தமுத மூலமொழி யால்.

குறிப்பு: தமிழ் உணர்ச்சியும் சீர்திருத்த ஆர்வமுங் கொண்ட அரக்கோணம் இளைஞர் "நலங்கிள்ளி" என்பவர். அவர் ஆங்கிலக் கவி தேனிசையரின் (Tennyson) "காதல் பலி" என்னும் கவிதைநூலைத் தழுவித் தமிழில் இனிய கவிதை எழுதியிருக்கிறார். அதற்கு முன் அவர் எழுதியுள்ள வாழ்த்துப் பாடலே மேலே உள்ளது.

—ஆ.

## ... அரங்குக்கு உணர்த்தப்படுகிறது

பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் கோலாலம்பூர்க் கூட்டம் ஒன்றில் பேசியபோது வெளிநாடுகளில் நிலவும் தமிழ்ப் பண்பாடு குறித்து, ஒரு பேர் ஆராய்ச்சி நடத்தவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி கலாசார சமூக நிறுவனத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளின் போது அவர் "இந்தியக் கலாசாரம் என்பதில் நான்கில் மூன்று பங்கு தமிழர் கலாசாரந்தான்" என்று வங்காளப் பேராசிரியரான டாக்டர் சுகுமார் சட்டர்ஜி குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டி, இது உலகத்தில் உள்ள கலாசாரங்கள் பலவற்றிலும் தமிழ்ப் பண்பாடு எவ்வளவு ஊடுருவி இருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகும் என்று குறிப்பிட்டார்.

பாங்காங் நகரில் உள்ள பாதிரிமார்கள் இன்னும் மன்னர் குல நிர்மாண விழாக்களில், தமிழ் மொழியில் உள்ள பாடல்களை ஒப்புவிப்பதைக் காண்கின்றோம் என்றும் அப் பேராசிரியர் சுட்டிக் காட்டினார்.

—ந.

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | சேய, தை, | தளிர் |
|---|---|---|
| 7 | 11-2-55 வெள்ளி. | 19 |


## காலம் விழித்து விட்டது!

இயன்ற பெரியவர்களிற் பலர் நர்ட்டில் நடைபெறும் பல்வேறு, இயக்கங்களையும், அவற்றின் போக்குகளையும் கண்டு 'காலம் கெட்டுவிட்டது' என்று சலிப்புற்றுச் சொல்லுகிறார்கள். என்றால், இயக்கங்களின்போக்குகளையும் அவற்றிற்குரிய அடிப்படைக் காரணங்களையும் நன்றாக உன்னிப் பார்த்தோ, தவறுகளைத் திருத்த முற்பட்டு முடியாமற்போயோ, சொல்லுகிற சொல் அல்ல; பெரும்பாலும் பழைமையில் கொண்டுள்ள தெளிவற்ற நம்பிக்கையினால் எண்ணிப் பாராமலும், மக்கள் தவறான பாதையிற் சென்றால் திருத்த வேண்டுமே என்ற கடமையுணர்ச்சியில்லாமலும், காரணம் இருந்தோ இல்லாமலோ வெறுப்புற்றுச் செய்வகை தெரியாமையால் சலிப்புற்றது போலச் சொல்கிற சொல்.

இப்படிச் சொல்லுகிறவர்களிற்கூடப் பெரும்பாலோருக்குப் பழைமையில் நல்ல நம்பிக்கையோ, அவற்றின் நன்மைகளை எடுத்து விளக்கும் தெளிவோ, அவற்றைக் காக்கும் உறுதியோ இல்லை; அப்படியே புதுமையை ஆராயும் ஆர்வமோ, அவற்றில் நல்லவைகளைக் கண்டு தழுவும் தெளிவோ, அல்லாதவைகளைத் தழுவாத உறுதியோ இல்லை. ஏதோ வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பேசுகிறவர்கள் கருத்துக் கேற்பத் தாளம் போட்டுச் சொல்லுகிற சொல்லாக இருக்கிறதே ஒழியத் தன்னம்பிக்கை நன்னம்பிக்கை யுள்ளவர்கள் சொல்லக் கூடிய சொல்லாக இல்லை.

சிறக, இப்படிச் சொல்லுகிறவர்களில் எத்தனைப் பேர், கீழ்க்கண்ட கேள்விகளுக் குரிய விடைகளைச் சொல்லாவிட்டாலும் எண்ணிப் பார்ப்பவர்கள்? ஏன் கெட்டது? யாரால் கெட்டது? கெட்டதைச் சீர்ப்படுத்த இதுகாறும் முயன்றார் யார்? முயலும் வழிகள் என்ன?

இக் கேள்விகட் குரிய விடைகளைச் சிந்தித்துக்கூடப் பார்க்காமல் சலிப்புச் சொல்லை வழங்குவது நல்லதல்ல.

இனி நம்மால் இயன்றவரை இவற்றிற் குரிய விடைகளை இங்கே சுருக்கமாகவாவது சிறிது பார்ப்போம்.

காலம் எந்த வகையில் கெட்டுவிட்டது? எல்லா வகையாலுந்தான் கெட்டுவிட்டது; வாழ்க்கை வளர்ச்சிக்கு அடிப்படையான அரசியல், தொழிலியல், பொருளியல் என்று எதை எடுத்தாலும் அவற்றில் தெளிவும் உறுதியும் நேர்மையும் இல்லை.

எப்படிக் கெட்டது? அடிமை நிலையில் கிடந்து, மேலை நாட்டுப் போலிப் புற நாகரிகத்தில் மயங்கி, ஆலைத் தொழில்களினால் தாக்குண்டு, பொருள்களைப் பரவலாக்காமல் ஒரே இடத்தில் குவிக்கும் முதலாளியியலின் பொருளாதாரத்திற் சிக்குண்டு நாட்டு மக்கள் பல துறைகளிலும் கெட்டுக் கிடக்கிறார்கள்.

இப்படிப் பல துறைகளிலும் கெடுதல் புகுந்தது. ஏன் என்றால், உண்மையான சமய உணர்ச்சி இன்றிப் போலிச் சமயச் சழக்குகளில் சடங்குகளில் மூழ்கி மக்கள் மனநலம் இழந்ததே என்று சுருக்கமாகச் சொல்லி விடலாம். உண்மைச் சமய உணர்ச்சி இருந்தால், நெஞ்சில் உறுதி, நினைப்பில் நேர்மை, செயலில் ஊக்கம், உள்ளத்தில் அன்பு உருக்கம் தெளிவு எல்லாம் இருக்கும். மேலே குறிப்பிட்ட எந்த வகைக் கெடுதலும் வர வாய்ப்பில்லாமல் இருந்திருக்கும்.

உண்மைச் சமய உணர்ச்சி யாரால் கெட்டது? என்றால், போலிச் சமய வாதிகளால்தான் கெட்டது. அவர்களில் பலர் இப்போது எங்கும் நிறைந்து, உண்மைகளை மக்கள் அறிய வொட்டாமல் தெளிவற்ற மயக்குரைகளிலேயே வெறும் சடங்குகளிலேயே மக்களை மயக்கித் தக்க

விளக்கங்கள் கூறாமல், கேட்பாரையும், பகைப்படுத்தி இழித்து, அவர்கள்மீது மற்றவர்களை ஏவிவிட்டுக் கொண்டு, 'காலம் கெட்டுவிட்டது' என்னும் இச்சொல்லைச் சொல்லியும் சொல்லுவித்தும் தம்மையெல்லாம் 'பரம சாதுக்கள்' என்று மக்கள் பலரும் எண்ணும்படி செய்து கொண்டு, தன்னல வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். கேடுகள் எல்லாவற்றிற்கும் மூல காரணம் இதுவே.

இந்நிலையைச் சீர்ப்படுத்த முடியாதா? என்றால், ஏன் முடியாது? முடியும்; அதற்குரிய வழியில் முயலவேண்டும். முயன்றால், காலம் விழித்துவிடுகிறது; ஆம், காலம் இப்போது விழித்துவிட்டது.

உண்மைச் சமய நெறி இது தான் என்று தெளிவாக்க வேண்டும். போலிச் சமயங்களின் போக்குக்கும் உண்மைச் சமய உணர்ச்சி ஒழுக்கங்கட்கும் வேறுபாடு காட்டாமல் ஓரே அடியாகச் சமயத்தையே வெறுத்துப் பேசுவதால் பயனில்லை. அரசியல், பொருளியல், தொழிலியல் போல வாழ்க்கைக்குச் சமயவியல் வேண்டுவதும், அடிப்படையானதுமாகும். அதன்மேல்தான் மற்றவை அமையவேண்டும். அகநலமில்லாத புறநலம் வளர்ந்தும் பயனில்லை அல்லவா? சமயம் அகநலங்களை உண்டாக்குவது; மற்றவை புறநலங்களை வளப்படுத்துவன. ஆகவே, சமயத் துறையில் இப்போது நல்ல சீர்திருத்தத் தொண்டு செய்யவேண்டும். இவ்வழியில் முயன்றார் யார்?

வாழ்க்கையின் பலதுறை நலங்களையும் பாதுகாக்கும் வகையில் உண்மைச் சமயத்துறையில் தகுந்த விளக்கங் காட்டி மக்களைத் தெருட்ட முற்பட்டவர்கள் இத் தென்றமிழ் நாட்டில் பண்டு தொட்டுப் பலராவர் அவர்கள் எல்லாம் உண்மையான தலைவர்கள்; புரட்சிக்காரர்கள்; மறுமலர்ச்சிக்காரர்கள்!

சங்ககாலத் தமிழகத்தில் முதன்முதல் இத்தகைய நற்பணியைச் செய்தவர் திருவள்ளுவர். சமயச் சழக்கர்களின் வாதங்களில் நுழையாமல் உண்மைச் சமயக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து வாழ்க்கை விளக்கமாகிய திருக்குறளை அவர் அருளிச் சென்றார்.

திருவள்ளுவரை அடுத்துப், பின்னும் இந்நாட்டில் வேற்று நாட்டவர் மொழியாளர் சமயத்தவர் ஆதிக்கம் மிகுதிப்பட்டு அடிமைத்தனமும் பிறவும் ஓங்கவே, அவர் அருளிய மெய்ச் சமய உண்மைகளையே திரட்டிப் பொது நெறியாக—சிவநெறியாக—வளர்த்தவர்கள் நால்வர் பெருமக்கள்.

திருக்குறள் கருத்துக்கள் எதனையும் ஒரு சிறிதும் பிறழாமல் ஒப்புவது சிவநெறி ஒன்றே என்பதையும், மற்றவை சிறிது சிறிதேனும் அதன் கருத்துகட்கு மாறுபடும் என்பதையும் நுனித்து அறிந்தால், யாரும் இக் கூற்றை மறுக்கமாட்டார்கள்.

இடைக்காலத்தில் இந்நாட்டு அரசியலில் எவ்வளவோ மாறுபாடு நேர்ந்து மக்கள் படிப்பில்லாமலும் தெளிவில்லாமலும் வேற்றவர் மொழி நாகரிகங்களில் அடிமைப்பட்டும் கிடந்ததால் சமயத்துறையில் பல குழப்பங்கள் நேர்ந்தன; சாதி வேற்றுமை வீண் வடிவுகளில் இடங்கொண்டுவிட்டது; சடங்குகள் மலிந்தன; அவற்றுக்கு விளக்கமும் இல்லை.

இந்நிலையில் மெய்கண்டார் தோன்றி நல்ல உண்மைகளைத் திரட்டிச் சைவசமயச் சிறப்பை மெய்ப்பொருளாராய்ச்சி உலகத்தில் ஒப்பற்ற முறையில் நிறுவினார்.

நால்வர்கள் நாயன்மார்கள் ஆழ்வார்கள் எல்லாம் இந்நாட்டு மக்களிடையில் புகுந்து புரட்சிகரமான சீர் திருத்தங்களை, நல்லுணர்ச்சிகளை, விளக்கங்களைக் கொடுத்து, வேற்றவர்களால் வந்த போலித் துறவு, நாட்டன்பு மொழியன்பு இல்லாமை, சாதிக் கொடுமை இவைகளைக் களைய முற்பட்டனர். அவர்களுக்குப் பின், கருத்து (தத்துவ) உலகில் உண்டான குழப்பங்களையெல்லாம் தெளிவுபடுத்தும் வகையில் திருவள்ளுவரையும் நால்வர் பெருமக்களையும் மற்றத் திருமுறை ஆசிரியர்களையும் பின்பற்றி நூல்கள் எழுதியவர்கள் மெய்கண்ட பரம்பரையினர்.

இவர்களை அடுத்துத் தாயுமானார், இராமலிங்கர் போன்றார் தோன்றித் தம் காலத்திற் கேற்பச் சில பல சீர்திருத்தங்களைச் செய்தனர்.

இனி, இக்காலத்தில் இவர்கள் எல்லாருடைய வழியையும் பின்பற்றி, மக்களிடை மொழி சமய சமூக அரசியல் முதலிய பல துறைகளிலும் சீர்திருத்த உணர்ச்சி உண்டாகும்படி சிறப்பு வகையில் தொண்டாற்றியவர் ஆசிரியர் மறைமலை அடிகள்.

இப்போது அத் தொண்டைப் பொது முறையில் திருவள்ளுவர் அடிப்படையில் நயம்படச் செய்து வருபவர் எங்கள் குருகுலத் தலைவர் ஆசிரியர் இளவழகனார் அவர்கள் ஆவர்.

இது நிற்கச், சீர்திருத்தத்துக்கு முயலும் வழிவகைகள் என்ன? மக்களில் பலருக்கு கடவுள் உண்டு, வினை உண்டு, மறுபிறப்பு உண்டு என்கிற உணர்ச்சியும் நம்பிக்கையும் இல்லை. இதனால் வந்த விளைவுகளே இன்றைய குழப்பங்கள் எல்லாம்.

இவ்வுணர்ச்சிகளை நம்பிக்கைகளை உண்டாக்க வேண்டியவர்கள் சமயத்துறையில் உள்ள தலைவர்கள், தொண்டர்கள். அவர்களுடைய உரைகளில் கடவுள் உண்மை பற்றிய வாதங்கள் நிரம்பி இருந்தாலும், ஒழுக்கத்தில் அவ்வுண்மை திரையிடுகிற முறையில் அவைகள் இல்லை. எதற்கெடுத்தாலும் விதி விதி என்று அவர்கள் சதிசெய்து மக்களை ஏய்த்து வந்த காரணத்தால், மக்கள் இன்று வினை உண்டு என்னும் உண்மையையே நம்ப மறுக்கிறார்கள். வினை விடாது வந்து தாக்கும், ஆகவே முக் கரணங்களாலும் நல்லதையே செய்யுங்கள் என்று சொல்வதற்கு மறுதலையாக, இருக்கின்ற இழிநிலைக்கு விதியே காரணம் என்று சொல்லி, மக்கள் முயன்று முன்னேற முடியாதபடி தடைகளை விதித்துத் தம்மையே உயர்த்திக் கொண்டனர், இடைக்காலத்தில் சமயத் துறையில் எப்படியோ தலைமை நிலைக்கும் வந்து விட்டவர்கள்.

எனவே, இந்நிலைகள் எல்லாம் மாற, குழப்பங்கள் ஒழிய, காலம் கெட்டுப் போயிற்று என்னும் சொல் மாறி நன்மை உண்டாக, சமயத் துறையைச் சீர்திருத்த வேண்டும்.

'சமயம்' இவ்வுலக வாழ்க்கையை நோக்கமாகக் கொள்ளாதது, மறுமைக்கு முத்திக்கு மட்டுமே வழி காட்டுவது' என்று மக்களிற் பலர் தவறாகவும் எண்ணுகின்றனர். இந்நிலை மாறும்படி, மும்மைக்கும், அதாவது சிறப்பாக இவ்வுலக வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வாழச் செய்வதற்கும், இது கொண்டு இனி வரும் மறுபிறப்பு வாழ்க்கைக்கும், முடிவாய் முத்திக்கும் வழி வகுப்பதே சமயம் என்னும் உண்மை தெளிவு செய்யப்பட வேண்டும். அதற்குச் சமயத் தொடர்பான கருத்துக்கள், கோயில் குளங்கள், மூர்த்திகள், வழிபாடு, விழா முதலியவற்றின் சடங்குகள் இவற்றின் அமைப்புகள் எல்லாமே, வாழ்க்கை நோக்கமுடையன என்பதை விளக்க வேண்டும். ஏற்றபடி இவற்றில் திருத்தங்களும் காண வேண்டும்.

இன்று எத்தனைப் பேருக்கு வாழ்க்கையில் சமயத் தொடர்பாக நடைபெறும் சடங்குகளுக்குரிய பொருள்கள் தெரியும்? கோயில்களின் அமைப்பு முறைச் சிறப்புக்கள் தெரியும்? அன்றாட வழிபாட்டு நுட்பங்கள் தெரியும்? பல்வேறு தீபாராதனை முறைகள், விழாக் கால வாகனங்கள் இவற்றின் உண்மைகள் தெரியும்?

ஆயிரமாயிரமாகப் பொருள்களைச் செலவிட்டு வெற்றாரவார விழாக்களும் பிறவும் நடத்தும் திருக்கோயில் செல்வர்கள் எல்லார்க்குமாவது இவ்வுண்மைகள் தெரியுமா? எவ்வளவோ செலவு செய்யும் அவர்கள், இவற்றின் உண்மைகளை மக்கள் அறியச் செய்வதற்கேனும் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

உண்மைகளை விளக்காமல் இருந்துவிட்டு, மக்கள் வாழ்க்கைக்கு இவைகள் பயன் படமாட்டா என்று எண்ணும்படி சமய நிலைகளையும் நிலையங்களையும் வைத்துக் கொண்டு, அவற்றை வேண்டாம் என வெறுத்துப் பேசும் மக்களைமட்டும் பழித்துப் பேசுவதால் என்ன பயன்? இக் கருத்துக்களை யெல்லாம் மெய்யன்பர்கள், மேல்நிலையிலுள்ள சமயத்தலைவர்கள், திருக்கோயில் அதிகாரிகள் கருதிப் பார்க்க வேண்டும்; ஆவன செய்ய வேண்டும்; இல்லையேல் காலம் கெட்டுத்தான் போகும்! ஆனால், காலம் இப்போது விழித்துவிட்டது!

இந்த நிலைகளையெல்லாம் எடுத்துக் காட்டிச் சமயத் தலைவர்களைச் சமய நிலையங்களின் தலைவர்களைத் தக்கபடி செயல்முகப் படுத்த வேண்டும்; சமய வெறுப்பாளர்களுக்கும் இயன்ற விளக்கங்களைத் தரவேண்டும்; மக்களிடையே நிறைய உண்மைப் பிரசாரம் உருக்கத்துடன் நடைபெறவேண்டும்; கருத்துள்ளோர் பலரும் பலமுகமாகப் பிரசாரங்கள் செய்ய வேண்டும். எங்கள் குருகுலத்தாரும் இயன்ற ஆர்வத்தோடு தம் ஆசிரியருடன் பேட்டைதோறும் ஊர்தோறும் கிழமைக்கு ஒரு முறையேனும் சென்று வழிபாடும் தொண்டுமாகிய பிரசாரம் செய்து வருகிறார்கள். பலரும் செய்யவேண்டும்; ஆதரிக்கவும் வேண்டும்; நாடு செயல்முகங் கொள்வதாக!

— ஒளியகம்.

# "அம்மையப்பன்"

(வே. ந. நாராயணன்.)

இளமையிலேயே தாய் தந்தையரை இழந்த இராமலிங்க சுவாமிகள் அம்பலவாணனை, அருள் திருப்பாதனை, உலகத்துக்குத் தாய் தந்தையராக விளங்கும் இறைவனைத் தனது தாய் தந்தையராக எண்ணி உள்ளம் உருகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுகின்றார்கள், கள்ளமில்லாத வெள்ளையுள்ளம் படைத்த சிறு குழந்தையாக நின்று.

அப்பெரியார் இறைவனைத் தாய் தந்தையாராகவே பாவித்து வேண்டுகின்ற வகை பலரும் அறிந்து அறிந்து இன்பம் எய்துதற் குரியது.

உடலாற் பருத்துக் தடித்துள்ளமகனைத் தவற்றின் காரணமாக அவனுடைய தந்தையார் அடித்துக் கண்டிக்கின்றார். அந்தச்சமயம் மகனை ஈன்ற தாய் ஓடி வந்து தந்தையின் பிடியினின்று மகனை விடுவித்துத் தன்னுடன் சேர்த்தணைத்து முத்தமிட்டு உச்சி மோந்து "அழாதேடா கண்ணே அழாதே! யாரும் உன்னை இனிமேல் அடிக்கமாட்டார்கள். யாராவது அடித்தாலும் நான் சும்மாவா பார்த்துக்கொண்டிருப்பேன்; பெற்ற வயிறு துடிக்குமடா! வா, பசியாரச் சாப்பிடு" என்று ஆறுதல் சொல்வாள். அத்துடனன்றித் தந்தையாரையும் பார்த்து "ஏன் குழந்தையைப் போட்டு இப்படி கொல்லுகிறீர்கள்? என்ன அவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டான்? அப்படித் தவறு செய்தால்தான் என்ன? நம்முடைய மகன்தானே, நாம் அதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாதா? பெற்றவர்களாகிய நாமே பொறுத்துக் கொள்ளவில்லை என்றால் வேறு யார்தான் பொறுத்துக் கொள்வார்கள்" என்று எடுத்துக் கூறுவாள். அடி வாங்கிய மகனுக்கு அதை மறந்துவிடும் அளவிற்கு ஆறுதல் மொழி கிடைத்துவிட்டது; அகன்றது வேதனையும்.

"தவறு" என்பது எல்லோருக்கும் நேரக்கூடியவொன்று. யார்தாம் தவறு செய்யாதவர்கள்! எல்லோரும் தவறு செய்தவர்களே. அது, அறியாமையாலும், அறிந்து வேண்டுமென்றும் ஆக இரு விதங்களில் செய்யப்படுகிறது.

அந்த மகனும் மற்றொரு சமயம் மீண்டும் ஒரு தவறியற்றினான். அத் தவறு அன்னையைப் பாதித்ததால் அவளுடைய செயலிற்கு இடையூறு உண்டு பண்ணியதால் அவள் சினம் கொண்டாள். மகனைப் பிடித்திழுத்து வாயார ஏசி மனமார அடித்துவிடுவாள்; சினம் வந்துவிட்டால் மாத்திரம் செய்வது இன்னதென்றுதான் அறிய முடியாதே.

அப்போது தந்தை ஓடி வந்து தாயின் சினப் பிடியிலிருந்து மகனை விடுவித்துத் தன் பக்கத்தே இருத்தி ஆறுதல் கூறுவார்; அது மட்டுமா; அன்னையையுங் கூடக் கண்டிப்பார்; "உனக்கு ஏதாவது அறிவு இருக்கிறதா? மகனை இப்படி அடிக்கிறாயே, என்னதான் தவறு செய்துவிட்டாலும் நம் குழந்தையல்லவா? அவனை இப்படி அடிக்கலாமா? பெற்ற தாயே இப்படியடித்தால் மகன் உள்ளம் என்ன பாடு படும்! என்று." அன்றொரு நாள் தந்தையடித்தபோது தாய் அணைத்து ஆறுதல் மொழிந்தாள், இப்போது தந்தையார் வந்து அவனை அணைத்து ஆறுதல் மொழிந்தார்.

இப்படித் தாய் அடிக்கையில் தந்தை யணைத்தும் தந்தையடிக்கையில் தாயணைத்தும் மகனுக்கு ஆறுதல் சொல்லுகிறார்கள். இருவருமே அடிக்கத் தொடங்கிவிட்டால் மகனின் கதி என்ன ஆவது?

இப்படித் தந்தையொருவனும் தாய் ஒருத்தியுமாக இருந்தால் ஒருவர் அடிக்க மற்றொருவர் அணைக்க முடிகின்றது. ஆனால், நீறு பூசி ஒளி பொருந்திய மேனியுடன் அம்பலத்தில் அழகு நடமிடும் புனிதனாகிய நீயொருவனே என்னுடைய தந்தையாகவும் தாயாகவும் இருக்கின்றாய். அம்மையப்பனாக இருக்கின்றாய். அவ்வாறான நிலையில் நீ என்னைப் பாழ்வாழ்வெனுமிப் படுமாயையிலே வீழ்வாய் என விதித்தால் யார் வந்து என்னைக் காப்பார்கள்? நீயடித்தால் எனக்கு ஆறுதல் சொல்பவர்கள் யார்? என்னை அணைப்பவர்கள் யார்? உன்னுடைய அடிகளை என்னால் தாங்க முடியாது கதறுகின்றேன். இனித் தவறிழைக்க மாட்டேன். இறைவா என்னை மன்னித்துவிடு. உலகெல்லாம் காப்பவனாகிய நீயே என்னை மன்னிக்கவில்லையென்றால்

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

பின் யார்தான் மன்னிப்பார்கள்? என்னுடைய தவற்றை நீக்கி நல்வாழ்வு அளிக்கவல்லவன் நீ யன்றி யாரிருக்கிருர்கள்? நீயே இப்படி என்னை ஒதுக்கலாமா? எனக்காகச் சொந்தம் பாராட்ட இங்கு யாரிருக்கிருர்கள்? தாய் அடித்தால் தந்தையிடம் ஓடி அப்பா! என அலறி அவரைச் சேர்த்தணைத்துக் கொள்வேன். தந்தை யடித்தால் 'அம்மா!' எனக் கூவி அன்னையைச் சார்வேன். ஆனல், இங்கு எனக்குத் தந்தை வேறு தாய் வேறு என இருவர் இல்லையே. நீயேயல்லவா தந்தையாகவும் தாயாகவும் இருக்கின்ருய். எனக்காக யார் வருவார்? யாரை நோக்கி நானும் செல்வேன்? ஆதலால், ஆதாவற்ற என்னை—அநாதையான என்னை அடித்ததுபோதும் அம்மையப்பா என்னை அணைக்க வேண்டுகின்றேன்— அருள் தந்து காக்கப் பிரார்த்திக்கின்றேன்— தொழுகின்றேன்.

இவ்வாறு உள்ளம் திறந்து உருகி வேண்டுகின்ற அழகு பாடல் அடியில் வருமாறு.

"தடித்தவோர் மகனைத்
தந்தையீண் டடித்தால்
தாயுடன் அணைப்பாள்;
தாயடித்தால்
பிடித்தொரு தந்தை
அணைப்பனிங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித் திருமேனி
அம்பலத்தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும்
அணைத்திடல் வேண்டும்
அம்மையப் பா இனி
யாற்றேன்"

—பிள்ளைச் சிறு விண்ணப்பம்,
திருவருட்பா,

# இல்வாழ்க்கை

(சி. தாமோதரம்)

ஆணும் பெண்ணும் ஈருடலும் ஒருயிரும் போன்றவை; ஆணின்றிப் பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை. தனித்து வாழும் அவை பகுதிபட்ட உயிர்களென்றே கருதப்படும். இவர்கள் அன்பின்வழி ஒன்றுதலே காதல். காதல் இல்லையேல் உலகில்லை; இவ்வீருயிர் இணைப்பே திருமணமாய் மனித இனத்தில் உருத்கொண்டது. இவர்கள் முல்லைவழி இருந்து வாழ்க்கையை நடத்த ஓர் அமைப்புதேவை அவ்வமைப்பே. இல்லமாம். அங்கு அரும்பும் நற்செயல்கள் உலகத்தின் உயர்விற்குத் துணையாகும். இல்லறத்தின் விரிவுதானே உலகம்!

இல்லறத்தான் முதற்கண், மணவினை யாகா மாணோன்பு கொண்டோன், இல்வாழ்க்கையைத் துறந்து தன்னில்லாளுடன் வனவாழ்வு மேற்கொண்டோன், அறநெறி நிற்கும் அருந்தவத்தோன் ஆகிய மூவர்க்கும் பற்றுக்கோடா யமைந்து இவ்வுலகத்தில் அறச்செயல்களை நிலைநாட்ட முற்படுகிருன்.

மேலும், இல்வாழ்வோன், வறுமையுற்றவர், உலக இன்பத்தை நுகர இயலாதவர், வாழ்க்கையில் மனமுடைந்தவர் ஆகிய மூவர்க்கும் ஆதாவு நல்கி உலக அமைதியைக் காக்கிருன்

இவ்வாறு அவன் ஞானியர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தாராகிய அனைவரின் நன்மையும் போற்றிப் பின் தன்னையும் காத்துக்கொண்டு உலகத்தையே இயங்க வைக்கும் ஆற்றலுடையவனுகிருன். தன்னல மற்று உலகவனுகிருன்.

மேற் சொன்ன வகையால் அவன் செயல் யாவும் இயற்கையாகவே அறவழியில் அமைகிறது பழி பாவத்துக்கு அஞ்சி, அறவழியில் பொருளை ஈட்டிப் பகுத்துண்ணும் பான்மையன். ஆகவே, பிறன் தூற்றுதல் இல்லாவாழ்க்கையாகிறது.

எனவே, அன்பு அவனுடைய பண்பாகவும், அறம் அதனடிப்படையில் விளையும் பயனுகவும் அமைகிறது. அதாவது அறச் செயல்களே இல்லறத்தின் வினைவாகும் என்பதாம். இதுகருதியே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனை வானுறையும் தெய்வத்துள் ஒருவனுக சான்ருேர் மதிப்பர். இத் தகு உயர்நிலையை அளிக்கவல்ல அறத்தைக் கைக்கொள்ளாது அவ் வறங்களின் பின் சென்று அல்லல் படுதல் எற்றுக்கோ!

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை1.

# மயிலம் திருமடம்

## இரண்டாவது பட்டம்

இரண்டாவது பட்டத்துச் சிவஞான பாலைய சுவாமிகள் முருகப் பெருமானால் ஆச்சாரியாபிஷேகம் பெற்றுப் பிரமபுரமென்னும் பொம்மையபாளையத்திலும் மயிலத்திலும் வீற்றிருந்தார். இதனை,

"எனை உரைத்த வாறன்றோன்
சீடனுக்குச்
சிறப்பாதி யீந்த மர்த்தி
புனையுமக்க மணிநீறு
தாரணஞ்செங்
கலிங்கமின்ன பூணச் செய்தே
யினியபா லருந்தியுறத்
தன்னமிசத்
தோமிச மிருத்தி யென்றுங்
கலைகடற்பார் தொழச்சீட
பரம்பரையின்
வாழ்கவெனக் கருணை
கூர்ந்தே"

—மயிலம் தலபுராணம்
திருமணச் சருக்கம். 71

"......அவனிவட்டத் தடரும்
வன்கலிக் கோடை தணியத்
தான்மாரி பெய்தன்ன
நிதிமாரி பெய்யுமிரு
தாமரைச் செங்கை யாளி
தயவாளி சிவஞான
தேசிகர்க்கும் பழஞ்
சதுர்மறைப் பொருள் விரித்து"

—மயிலம் முருகன் பிள்ளைத் தமிழ்
செங்கீரை-1

"நாடற்கரிய மறைமுதலை
நம்பன் கேட்ப வுரைத்தபடி
ஞாலம் புகுந்து சிறந்தசிவ
ஞானி யுணர மறைவிரித்து"

—ஷை வாரானைப் பருவம்-1

"......பண்ணிப்பா ரெல்லாந்
தெருளுமால் பாலரிய
அட்டமா சித்தியுஞ்
சின்மயா நந்தநிலையுந்
தேருமெண்ணெண்
கலையுநண்ணு வண்ணந்தந்து
சிவஞான தேசிகேந்திரற்கு
அருள்சுரந் துதவிய
வுனைவர வழைத்தன
னம்புலீயாட வாவே"

—ஷை அம்புலி-1

"மவுனமொழி யாலுரைத்
தெங்கள் சிவஞானிதன்
மணிமௌலி மீது வைத்த
செந்தாமரைக் கைத்தலஞ் சிவப்பூரச்
சிறுபறை முழக்கியருளே"

—ஷை சிறுபறை-1

"அறிவதை யறிந்தார் மூவராறுமுகக்
குரவன் றன்பான்
முறைவரு வருண முற்று
முக்கணன் குருவென்றன்பு
செறிகிலன் மலய வெற்புச்
செஞ்சடை முனிவன்யாக்கை
குறியவன் குறுகி லானெனங்
கோன்சிவ ஞானி தானே."

—சிவஞான பாலைய சுவாமிகள்
கலம்பகம்-93.

என்பனவற்றால் அறியலாம்.

இந்தச் சுவாமிகள் பச்சைக் கந்தர் மரபில் தோன்றினர் என்பதனை "பச்சைக்கந்த மாமுனி காத்துதித்தாய்" (சி. பா. கலம்பகம் 50) என்ற அடியாலும் அம்மவை புதல்வரென்பதனை "செய்தவம் பெருகும் அம்மவை வளர்க்குங் குழவி செங்கீரை யாடியருளே" (சி. பா. பி தமிழ், செ. ப. 6) "அன்பு கொண்டக நெகிழ்ந்தணி வளர்க்க நினையும் அம்மவைக்கருள் தருங்குழவி யான பரிசும்" (பாசவதைப் பரணி 50) என்ற அடிகளாலும் இவர் முருகப் பெருமான் கட்டளைப்படி பாலையே உணவாகக் கொண்டிருந்தார் என்பதனை "மயிலை வாழ் அமுத பானமார் ஞானமாதவனே." (சி. கலம்பகம்) "மயிலைவெற்பிற் பாலுண்டு பாலைய னென்றிருந்தாய் கொலெம் பாலையனே" (சி. கலம்பகம் 27) "இனிய பாலருந்தியுற" (ம. த. பு. தி. 71) "முன்னுளிலொருஞான முளையயின்ற வாமுத மென்னுளு முண்கின்ருய்" (சி. கலம்பகம் 1) என்ற அடிகளாலும் இதுவரைப் பட்டத்தமர்ந்துள்ள சுவாமிகள் அனைவரும் பாலையே உணவாகக் கொண்டிருக்கின்றமையாலு மறியக்கூடும்.

சுவாமிகளிவ்வாறு பொம்மபுரம், மயிலமிவ்விரு தலங்களிலும் மாறிமாறி வசித்து வந்தவர், காஞ்சியிற் சென்று ஏகாம்பர ஈசுவரரைத் தரிசிக்கச் சென்றனர். சென்று அந்நகரில் தங்கியிருக்கும்போது பல அன்பர்கட்கு அருள் புரிந்து வருங்கால், விஷந் தீண்டியிறந்த ஒருவனை ஒரு அன்பர் வேண்டுகோட்கிணங்கி நீறு இட்டு உயிர்ப்பித்தனர். அதுவுமன்றி அவ்விடத்து எப்போதும் விஷவாதனை இல்லாதிருக்கவும் அருள் செய்தனர். "இளைக்குங் கருணைச் சிவஞானதேவன் திருக்கைத் திருநீறே.......விடத்திற் கருஞ் சீர்க் கலுழனும்" என்னும் கலம்பகச் செய்யுள் இதனை உணர்த்தும்.

காஞ்சியம்பதியில் அருந்தமிழ் நாடொருகோடி தவஞ்செய வந்ததிர் வெள்ளருவி தூங்குயர் மயிலைவரை சிவஞானபாலைய சுவாமிகள் அற்புத மூர்த்தியாய் விளங்குவதை, அந்நாட்டையாண்ட நவாபு உணர்ந்தான். தன் மனைவிக்கேற்பட்ட சூலைநோயைச் சுவாமிகளின் அருளால் தீர்த்துக்கொள்ள விரும்பினான். இல்லாளொடும் சுவாமிகளின் சந்நிதியை அடைந்து வணங்கித் தன் குறைகளை நீக்குமாறு விண்ணப்பித்துக் கொண்டான்.

சுவாமிகள் அவனை நோக்கி, ஏகாம்பரேசர் சந்நிதியில் உன்னாற் குறைக்கப்பட்ட நித்ய நைமித்தியங்களை முன்போல நடத்துக! என்றாணையிட்டு விபூதியால் அந் நோயைத் தீர்த்தனர்.

குருகுலத்தார்க்கு:

குருகுலக் கூட்டுறவு மன்றத்தில் சேர்ந்து விட்டீர்களா?
சேராதவர்கள் உடனே சேரவும்;
சேர்ந்தவர்கள் பங்குத் தொகைகளை உடனே செலுத்தவும்;
விரைவில் பண்டகசாலை திறக்கவேண்டி யிருக்கிறது.

—செயலாளர்.

நவாபு பெருமகிழ்ச்சியுற்று ஏகாம்பரேசருக்கு, ஆலய நிவேதனங்கள் முன்னினும் பன்மடங்கேற்படுத்தியும், சுவாமிகள் அங்கு தங்கியிருத்தற் குரிய திருமடங் கட்டுவித்தும், விளை நிலங்கள் பல தானம் செய்தும் விடை பெற்றுச் சென்றான். (இம்மடம் விளை நிலம் பிறர் வசப்பட்டு, இப்போதுள்ள 18-ம் பட்டம் சிவஞான பாலயசுவாமிகள் காலத்து, கோர்ட்டு மூலமாக சுவாதீனமாயிருக்கிறது.)

சில நாட்களுக்குப்பின் சுவாமிகள் அவணின்றும் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு செய்யூரை அடைந்தனர். அங்குள்ள வேளாளர், சுவாமிகளைப் பரிசோதிக்க ஒரு புதுக்குடத்தில் மணலை மறைத்துக் கொண்டு வந்து கொடுத்தனர். சுவாமிகள் அம்மணலைச் சர்க்கரையாக்கி அங்குள்ளவர்க்கு அளித்தனர். அதனால் அவ்வேளாளர் மகிழ்ந்து நிலமுதலியன விடுத்துக் கட்டிய திருமடத்தில் (உப்பளமும் ஜீர்ணதிசையிலுள்ள மடமும் இப்பொழுதும் மடத்திற்குச் சுவாதீனமாகவுள்ளன) சின்னாளிருந்தனர். இதனைப் "பொய்யர் சிலர் மாலையிட்டு மணலோடு வெண்கல் லடையுமா குடத்தினிடை சீனி கண்டு ஒல்வகை செய்து ஒலை பெற்று அவர் செய் வேலையுங் கொள்ளுமுனி" (புலவர் புராணம் சி. சருக்கம் 28) என்பதனாலுணரலாம். பின்பு தென்தேசயாத்திரை செய்யப் புறப்பட்டுச் சுவாமிகள் தில்லை முதலிய தலங்களை வணங்கி மதுரையை யடைந்து இறையை வணங்கி எழுந்தருளி இருந்தார்.

மதுரையில் தையற்காரன் ஒருவன் புத்திரப்பேற்றை விரும்பி மீனாக்ஷியம்மன் சந்நிதியிற் கட்டுதற்கு 64 திருவிளையாடலையும் தையலாற் சித்தரித்த ஆடையை அம்மன் கனவி லருளியபடி சுவாமிகள் சந்நிதியில்வைத்துவணங்கினான். சுவாமிகள் அம்பிகையின் திருவருளை மகிழ்ந்து அவனுக்கும் அவன் மனைவிக்கும் திருநீறளித்து மூப்பகற்றி இளமை தந்து புத்திரப் பேற்றையு மளித்தனர். "திளைக்குங் கருணைச் சிவஞான தேவன் திருக்கைத் திருநீறே, மலடர்க் கரிய மகவாகும்" (சி. கலம்பகம் 44) என்ற அடி இதனை உணர்த்தும். சின்னாட்குப் பிறகு சுவாமிகள் ஆண்டிருந்து புறப்பட்டுப் பல தலங்களை வணங்கித் திருமுதுகுன்றம் வந்து தெய்வீக சித்தோடு விளங்கி வந்தார்.

இவ்வாறு விளங்கி யருள்வதைக் கூனிமேடு என்னும் பக்கத்துஊரிலுள்ள மாந்திரீகன் ஒருவன் கேள்வியுற்றுச் சுவாமிகள் மீது அழுக்காறு கொண்டவனாகிச் செஞ்சியிற் சென்று, திரியம்பக மகாராஜனைக் கண்டு, சுவாமிகள் பலரை ஏமாற்றுவதாகப் பல கூறி அவ்வரசனை அழைத்துவந்து காட்டினான். அரசன், மாந்திரீகன், சிவஞான பாலைய சுவாமிகள் இருவரையும் தர்க்கம் செய்யச் சொல்லி அதனால் உண்மையில் உயர்ந்தவரைக் காணமுடியாது. இருவரையும் கடலிற் கட்டியிடின் சுகமாக முன்னங் கரையேறுபவரே சிறந்தவராவர் என்று கூறி இருவரையும் தோணியிலேற்றிக் கடலின் மத்தியில்விடுவித்தான். மாந்திரீகன் அங்குள்ளமீனால் விழுங்கப்பட, சுவாமிகள் மட்டும் கடலிற் போட்டவர்கள் கரைசேர்வதற்கு முன்னரே கரையில்வந்து வீற்றிருந்தருளினார்.

அதுகண்ட மன்னன் பயந்து பலவாறு தோத்திரித்து வணங்கி மாந்திரிகனையும் எழுப்பியருள வேண்டுமென வேண்டினர். சுவாமிகளு மவ்வாறே யாகட்டுமென அருள் புரிந்து கடலை நோக்கிக் கூப்பிட உடனே ஒரு மச்சம் கரையை யணுகி மாந்திரிகனை உமிழ்ந்தது. (இம்மீன் பண்டாரக் கெளுத்தி என வழங்கும். இம் மடத்திற்குக் கொடி இதுவே.) அதைக் கண்ட அரசர் முதலியோர் மிகவும் வியந்து வணங்கித் தனது கொடிய பகைவரை வெல்லும் பொருட்டு வேண்டிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று வணங்கினதோடு தன் அருமருந்தன்ன இளவயதுடைய மகளின் கூந்தல் நரைத்திருந்ததை மாற்றியருள வேண்டும் என்று வணங்கினான். சுவாமிகள் திருநீற்றின் பெருமையினாலேயே, அரசன் விரும்பிய அனைத்துமருளி அவன் மகளது நரைக் கூந்தலையும் கருங் கூந்தலாக அருளினார்.

(வரும்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)